✶ அர்ச்சகர் மேலாண்மைக் குழுவின் உறுப்பினராக அரசால் நியமிக்கப்பட்ட பெருமை உடையவர்.

✶ அர்ச்சகர் பயிற்சிக்கு இவரது நூல்கள் சில பாடமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட பெருமை உடையவர்.

✶ அரசு அமைத்த ஓதுவார் பயிற்சி மேலாண்மைக் குழுவில் உறுப்பினராக நியமிக்கப்பட்ட பெருமை உடையவர்.

✶ தை முதலே தமிழ்ப் புத்தாண்டு என்று பலப்பல சங்க நூல் சான்றுகள் காட்டி தெய்வமுரசு இதழில் கட்டுரைகள் மூலமாக நிறுவியவர்.

✶ முற்றிலும் தமிழே கொலுவிருக்க வடமொழி வாசனையே இல்லாமல் எண்ணிலும் எழுத்திலும் எல்லாம் தமிழ் என முதன்முதல் ஒரு தமிழ் நாட்காட்டியை உருவாக்கிய பெருமை உடையவர். அதன் பெருமைகளை இந்து, டெக்கான் குரோனிக்கள் போன்ற ஆங்கில ஏடுகளும் பாராட்டிய பெருமை உடையவர். இணைய தளத்தில் கண்ட இத்தமிழ் நாட்காட்டியை அமெரிக்காவின் லாஸ் ஏஞ்செல்ஸில் உள்ள லயோலா மேரிமவுண்ட் பல்கலைக் கழகம் வரிந்தெடுத்துக் கொண்டு தனது தமிழ்த் துறைமாணவர்களுக்கு இது பற்றி வகுப்பு எடுக்கின்றது என்னும் பெருமை படைத்தவர்.

✶ அகில இந்திய வானொ, பொதிகை தொலைக்காட்சி, சன் தொலைக்காட்சி, சன் நியூஸ் தொலைக்காட்சி, விஜய் தொலைக்காட்சி, ஜெயா தொலைக்காட்சி, மக்கள் தொலைக் காட்சி, கலைஞர் தொலைக்காட்சி, வின் தொலைக்காட்சி, வசந்த் தொலைக்காட்சி, இலங்கை ஐடிஎன் தொலைக்காட்சி, ரூபவாகினி தொலைக்காட்சி, மலேசிய ஆர்.டி.எம் தொலைக்காட்சி மற்றும் வானொ, சிங்கப்பூர் தொலைக்காட்சி, மொரிசியஸ் எம்பிசி தொலைக்காட்சி போன்ற பல்வேறு தொலைக்காட்சிகளில் தமிழ் வழிபாட்டிற்கு ஆதரவாகவும், இலக்கியச் சொற்பொழிவுகளாகவும், பேட்டிகளாகவும் நிகழ்ச்சிகளை அளித்த பெருமை உடையவர்.

✶ 1000-த்திற்கும் மேற்பட்ட சொற்பொழிவுகளையும், 300க்கு மேற்பட்ட கட்டுரைகளையும் வரைந்த பெருமை உடையவர்.

இன்னும் பலப்பல : மேலும் விரிக்கில் பெருகும்.

✶

★ மணி விழா தமிழ் வழிபாட்டு நிகழ்ச்சிகள் (21.09.2009) அன்று முழுவதும் மேற்கூறிய தேவர் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது!.

★ நாடறிந்த நற்றவச் சீலர்கள், நற்றமிழ்ச் சான்றோர்கள் பலரும் பங்குபெற நடைபெற இருக்கிறது.

★ பள்ளி, கல்லூரி மாணவர்களிடையே தமிழ் வழிபாட்டுப் பேச்சுப் போட்டி இவ்விழாத் தொடர்பாக நடைபெறுகிறது.

★ விழாச் சிறப்புகளைத் தாங்கி தெய்வமுரசு செப்டம்பர் 2009 இதழ் சிறப்பு மலராக வெளிவருகிறது.

★ விழா மலருக்கு ஆன்றோர் பெருமக்கள் கட்டுரைகளை அளித்துச் சிறப்பிக்க வேண்டுகிறோம்.

★ விழா மலருக்கு விளம்பரங்கள் அளித்து மலரை வண்ணமலராக்க உதவுங்கள்.

★ ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர் வாழும் போதே வாழ்த்த விழாவிற்கு அன்பர்கள் திரளாக வந்து சேருங்கள்! தமிழ் வழிபாட்டின் வரலாறு படையுங்கள்!

★ விழா சிறப்புற நன்கொடைகளை மணிவிழாக் குழுவிற்கு மனமுவந்து அளித்துத் தமிழ் மணக்கச் செய்யுங்கள்!.

**'தெய்வத்தமிழ் அறக்கட்டளை'**
9/1, மாஞ்சோலை முதல் தெரு,
கலைமகள் நகர், ஈக்காட்டுதாங்கல்,
சென்னை - 600 032.



உ

செந்தமிழ் வேள்விச் சதுரர்

# மு.பெ. சத்தியவேல் முருகனார்

# மணிவிழா



நாள் : **21.09.2009**, திங்கட்கிழமை
நிகழ்ச்சிகள் காலை 6.00 மணி - இரவு 9.00 மணி
இடம் : பசும்பொன் தேவர் திருமண மண்டபம்
158/100, அபிபுல்லா சாலை
தியாகராய நகர், சென்னை - 600 017.

## மணிவிழாக் குழு :

✦ தெய்வமுரசு ✦
✦ சோமசுந்தரர்
ஆகமத் தமிழ்ப் பண்பாட்டு ஆராய்ச்சி மன்றம் ✦
✦ தமிழ் வழிபாட்டுப் பயிற்சி மையம் ✦
✦ திருமுறை பாதுகாப்பு சங்கம் ✦
✦ தெய்வத் தமிழ் அறக்கட்டளை ✦

தொடர்பு :
**'தெய்வமுரசு'**
9/1, மாஞ்சோலை முதல் தெரு,
கலைமகள் நகர், ஈக்காட்டுதாங்கல்,
சென்னை - 600 032. செல்பேசி : **9444903286**
மின்னஞ்சல் : **dheivathamizh.org**

- விடுதலைப் போராட்ட வீரர்-வீராங்கனையான திருப்புகழ்சிவம் என்னும் வேலூர் அன்பர் தெய்வத்திரு. மு.பெருமாள் - மு.பெ. காமாட்சி இணையரின் தவப்புதல்வர். தந்தை தாய் நாட்டின் விடுதலைக்குப் போராட அவர்கள் வழியில் ஆலயங்களில் அருந்தமிழ் விடுதலைக்குப் போராடிடக் களம் பல கண்டவர்.

- அருந்தமிழ் வழிபாடே ஆலயங்களில் அரசோச்ச மின்சார வாரியத்தில் வகித்த உயர் பொறியாளர் பதவிக் காலத்தின் பத்தாண்டுகளை உதறித் தள்ளிக் களத்தில் இறங்கி அரும்பணி ஆற்றும் கொள்கை வீரர்.

- இதுவரை 1400-க்கும் மேற்பட்ட தமிழ்க் குடமுழுக்குகளையும், 3000த்திற்கும் மேற்பட்ட திருமுறைத் திருமணங்களையும் மற்றும் ஆயிரக்கணக்கான ஏனைய தமிழ் வழிபாட்டுச் சடங்குகளையும் ஆற்றிய பெருந்தகையாளர்.

- தமிழ் வழிபாட்டிற்கு ஆதரவாக 40 நூல்களை வெளியிட்ட நூலாசிரியர்.

- 40க்கும் மேற்பட்ட பட்டங்களைப் பெற்றவர்.

- வாரியார் சுவாமிகளின் உறவினர் மற்றும் அவரிடம் ஆச்சாரிய அபிடேக தீக்கை பெற்றவர். வாரியார் சுவாமிகள், சிரவை ஆதீனம், பேரூர் ஆதீனம் சாந்தங்க அடிகளார், குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், மயிலம் பொம்மபுரம் ஆதீனம், திருவாவடுதுறைஆதீன அருட்டிரு முத்துக்குமாரசாமி தம்பிரான் சுவாமிகள், தவத்திரு ஊரன் அடிகள் போன்ற பல்வேறு சமயத்துறைத் தலைவர்களின் ஆசி பெற்றவர்.

- சங்கநூற்கள், பதினெண் கீழ்க்கணக்கு, தொல்காப்பியம், நன்னூல், திருமுறைகள், சித்தாந்த சாத்திரங்கள், திருப்புகழ், பெரியபுராணம், திருவிளையாடற் புராணம், கந்தபுராணம், தேம்பாவணி, கம்பராமாயணம், சீறாப்புராணம் எனப் பல்வேறு தமிழ் இலக்கிய, இலக்கணக் காவியங்களைக் கற்றுத் தேர்ந்த நற்றமிழ்ப் புலவர்.

- வெண்பாவை விரைவாகப் பாடும் வல்லமை படைத்த ஆசுகவி. சித்தாந்த கவிமணி என்றும் இளங்கம்பன் என்றும் வாரியார் சுவாமிகளால் பாராட்டப் பெற்ற கவிஞர்.

- நான்கு வடமொழி வேதங்களையும், 108 உபநிடதங்களையும், கிடைத்துள்ள ஆகமங்கள், உபஆகமங்களையும் கற்றுத்தேர்ந்து அவற்றிற்கு மேலானது தமிழ்வேதமும் தமிழ்வழிபாடும் தான் என்று தக்க சான்றுகளுடன் தமிழ்வழிபாட்டைத் தருக்க ரீதியாக நிலை நாட்டி வரும் கற்றோர்க்குத் தாம் வரம்பாகிய நற்றமிழறிஞர்.

- தமிழ் ஆகம அடிப்படையில் தமிழ்நெறி தவறாமல் முதன்முதல் செந்தமிழாகம குடநீராட்டு நன்னூல் வழங்கி வரலாறு படைத்தவர்.

- தொட்டிடுதல் தொடங்கி அடக்கம் வரை திருமணம் உள்ளிட்ட 16 வாழ்வியல் சடங்குகளையும் தமிழில் ஆற்றிட 'வண்டமிழ் வாழ்வியல் சடங்குகள்' என்ற நூலை வழங்கி வரலாறு படைத்தவர்.

- முதன்முதல் தனி ஒரு மனிதனாகத் தமிழ் வழிபாட்டுப் பயிற்சி மையத்தை நிறுவி நூற்றுக்கணக்கான மாணவர்களுக்குப் பயிற்சியும், சிவதீக்கையும் அளித்து வருபவர்.

- மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, பினாங்கு, மொரீசியஸ் போன்ற நாடுகளிலும் தமிழ் வழிபாட்டுப் பயிற்சி அளித்து, அங்கு தமிழ்க் குடமுழுக்குகளையும் ஆற்றியவர்.

- நினைக்கவும் அரிதான வகையில் இந்து அறநிலையத்துறை ஆதரவுடன் இதுவரை ஏறத்தாழ 300 சிவாச்சாரியார்களுக்குத் தமிழ் வழிபாட்டுப் பயிற்சி அளித்து சாதனை படைத்தவர்.

- முதன்முதல் பாடல் பெற்ற தலமான மயிலை அ/மி கபாலீசுவரர் திருக்கோயில் அறநிலையத்துறை ஆதரவில் வழக்குகளை வென்று உலக நன்மைக்காகத் தமிழ் வேள்வி ஆற்றி அ/மி கற்பகாம்பாள் - கபாலீசுவரர்க்கு அருட்டமிழ் நீராட்டிய ஆன்ற பெருமை உடையவர்.

- முதன் முதல் அ/மி கபாலீசுவரர் திருக்கோயில், வழக்குகளை வென்று சந்தான குரவர்கள் திருமேனிகளை தமிழ்வேள்வி ஆற்றி பதிட்டை செய்து சாதனை படைத்தவர்.

- மேற்படி பதிட்டைக்கு எதிராக வழக்கு தொடரப்பட்ட போது தமிழில் பதிட்டை செய்ததற்கு ஆதரவாக வரலாற்றிலேயே முதன் முறையாக உயர்நிதி மன்றத்தில் தீர்ப்பு பெற்றுத் தந்தவர்.

- தமிழ்க் குடமுழுக்கு கரூரில் நடைபெற்றபோது அதற்கு ஆதரவாகப் பங்குபணி ஆற்றியவர்.

- தருமபுரத்தில் தமிழ்க் குடமுழுக்கு பற்றி நடைபெற்றகருத்தரங்கில் 55 சிவாச்சாரியார்கள் தமிழ்க் குடமுழுக்கிற்கு எதிராக வாதுரையாடிய போது அவர்களை எதிர் நின்று தன்னந் தனியாக தமிழ்க்குடமுழுக்கிற்கு ஆதரவாக வாதுரை செய்து தமது சிறந்த வாதத்திறனால் எதிரவர்களையும் இசையச் செய்து முதற்படியாக தமிழகத்தில் 90 சதவீதத்தில் உள்ள பெரும்பாலான ஆகம முறைப்படி அமையாத திருக்கோயில்களில் தமிழ்க் குடமுழுக்கு ஆற்றலாம் எனத் தீர்மானம் இயற்றச் செய்த பெருமை உடையவர். தீர்மானத்தில் ஆதீனங்கள் ஒரு புறமும், தாம் ஒரு புறமாகவும் கையெழுத்திட்டு வரலாற்றுத் திருப்புமுனையை நிகழ்த்தச் செய்தவர்.

- தமிழ் வழிபாட்டுச் சிறப்புகளையும், பண்பாட்டையும் உலகெங்கும் பரப்பிட “தெய்வமுரசு” என்கிற ஓர் ஆன்மீக இதழைத் தொடங்கி ஐந்து ஆண்டுகளாக வெற்றிகரமாக நடத்தி சான்றோர் பலரின் பாராட்டுகளைப் பெற்று வருபவர்.

- தமிழ் வழிபாட்டிற்கு அடிப்படையான தமிழாகமம் என்று ஆன்றோர் போற்றும் திருமந்திரத்திற்கென 18 ஆண்டுகளாக 3 நாள் விழா எடுத்து திருமந்திர, திருமுறை, தமிழ்ச் சான்றோர்களுக்கு விருது வழங்கி திருமந்திர நெறியைப் பரப்பி வருபவர். அதற்கென சோமசுந்தரர் ஆகமத் தமிழ்ப் பண்பாட்டு ஆராய்ச்சி மன்றத்தை நிறுவி நெறிப்படுத்தி வருபவர்.

- திருமுறைத் திருமணம், தமிழ்க் குடமுழுக்கு, தமிழ்வழிபாட்டுப் பயிற்சி வகுப்பு ஆகியவற்றை முடக்கத் தருமபுர ஆதீனத்தின் சீடர்கள் என்று கூறிக்கொள்ளும் நால்வர் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்து அவற்றிற்கு இடைக்காலத் தடையாணை பெற்றதை எதிர்த்து வாதுரையாடி அந்தத் தடையை உடைத்தெறிந்து வரலாற்றுச் சாதனை படைத்தவர். அதன் பொருட்டு 'தமிழ் வழிபாட்டுச் சாதனையாளர்' என்று பேரூராதீனத்தால் பட்டம் அளிக்கப்பட்டவர்.

- திருமந்திரத்திற்கென தனியே இணைய தளம் கண்டவர்.

- ஓர் ஆன்மீக மாத இதழான தெய்வமுரசிற்கெனவே **dheivathamizh.org** என்ற இணைய தளத்தை கண்டு அதனை வழி நடத்திவருபவர்.

- தமிழ் எழுத்துக்கள் மொத்தம் 51 என்று திருமந்திரப் பாடல்கள் மூலமாகவும் தொல்காப்பியம் மூலமாகவும். கல்வெட்டுச் சான்றுகள் மூலமாகவும் நிறுவிய முதல் தமிழறிஞர்.

- சிதம்பரத்தில் சிற்றம்பல மேடையில் திருமுறை பாடுவது தொடர்பான வழக்கில் அறநிலையத்துறை நீதிமன்றத்தில் விண்ணப்பித்து தடையை உடைத்து அங்கே திருமுறையைப் பாடச் செய்யும் பணியில் பங்காற்றியவர். ஆணையர் கொடுத்த அந்தத் தீர்ப்பிற்கு இவரது விண்ணப்பத்தில் காட்டிய சான்றுகளே அடிப்படை என்று ஆணையரே கூறி பல சமயக் கூட்டங்களில் பாராட்டிய பெருமை உடையவர்

- சிதம்பரம் கோயில் நிர்வாகம் தொடர்பான வழக்கிலும், உயர்நீதிமன்றத்தில் வாதுரையில் தன்னையும் இணைத்துக் கொள்ளச் செய்து தீட்சிதர்களிடமிருந்து அறநிலையத்துறையின் கீழ் நிர்வாகத்தைக் கொணரும் தீர்ப்பைப் பெற்றவர்.

- கேளாரும் வேட்ப மொழியும் இவரது சொற்பொழிவாற்றும் திறனால் ஈர்க்கப்பட்டு சென்னைப் பல்கலைக் கழகம் (இருமுறை), அண்ணாமலைப்பல்கலைக்கழகம், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் மற்றும் ஆந்திரமாநில திராவிடப் பல்கலைக் கழகம் ஆகியவை அழைக்க அப்பல்கலைக் கழகங்களில் சொற்பொழிவாற்றிய பெருமை உடையவர்.

- சைவ சித்தாந்தம் தோன்றிய நாள் தொட்டு சிவஞான போத சூத்திரம் 12-ற்கும் முழுக்க 16 உரை செய்து ஒரு குறுந்தகடுப் பெட்டகம் வெளியிட்ட முதல் பெருமை இவருடையது.

- தருக்க இயலுக்கெனவே 7 தொடர் சொற்பொழிவுகளைத் திரளான கூட்டத்தில் ஆற்றி சித்தாந்த அளவை இயல் பெருமையை நிலைநாட்டியவர். சிவஞான பாடியத்திற்கு எழுத்தெண்ணி ஐந்தரை ஆண்டுகள் வரை விளக்கம் செய்த பெருமை உடையவர்.

- அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற அரசு ஆணையின் படி அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழுவின் கூட்டங்களுக்கு அழைக்கப்பட்டு அரிய கருத்துக் கொடைகளை வழங்கியவர். அதற்காக அக்குழு அரசுக்கு அளித்த அறிக்கையில் குழுவின் தலைவரான நீதியரசர் மாண்புமிகு. ஏ.கே. ராஜன் அவர்களால் தனிப்பட்ட முறையில் சிறப்பு வகையில் நன்றி கூறப்பட்ட பெருமை உடையவர்.

- அர்ச்சகர் பயிற்சிப் பாடத்திட்டங்களை வகுப்பதில் பங்கு பணி ஆற்றியவர்.